அதுமட்டுமல்ல. இன்றைக்கு தனியார் கல்லூரிகள் பரவலாகப் பெருகிவிட்டன, கடந்த 10, 13 ஆண்டுகளில். கல்வி நிறுவனங்கள் பெருகிவிட்டனவே தவிர வசதிகள் பெருகவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே ஒரு விளக்கம். தனியார் கல்வி நிறுவனங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். அரசு நடத்துகின்ற பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. தனியார் கல்லூரிகள், பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன என்றால் அவற்றை எல்லாம் அரசால் நடத்த முடியுமா? அதற்குப் பணம் இருக்கிறதா ? என்னிடத்திலே கூட சில பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சர்க்காரால் அத்தனைப் பள்ளிக்கூடங்களையும் நடத்த முடியாது என்பதால்தான் தேவையைக் கருதி, தனியார் பள்ளிக்கூடங்களைத் தொடங்குகிறார்கள். அது கூடாது என்று கருதுகிறார்களா ? அரசுப் பள்ளிகளிலே தவறு நடக்கவில்லையா ? இதற்கு என்ன பதில் என்று அறிய விரும்புகிறேன்.

பார்வையாளர்கள் மாட்த்திற்கான அனுமதி:

10. ஒழுங்குப் பிரச்சினை.

பார்வையாளர்கள் மாடத்திற்கான அனுமதி :

திரு. உ. ரா. வரதராஜன் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறேன். எங்களுக்கு அனுப்பியிருக்கிற சுற்றறிக்கையில் தலைவர் ஆணைப்படி இன்றைக்கு பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பேரவைத் தலைவர் மாடத்தில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, எங்களுக்குத் தரப்பட்ட அந்த ஆணை மாற்றப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் பார்வையாளர்கள் அல்ல; அரசு அலுவலர்கள்.

9. வரவு-செலவுத் திட்டம்: 1989-90—பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. எம். இராமச்சந்திரன் : பல்வேறு தனியார் கல்லூரிகள் அமைக்கப்பட்டதற்கும், அரசு கல்லூரிகளிலே சொல்லப்படுகின்ற ஊழல்களுக்கும் இதற்கு முன்னாலே இருந்த அரசைத்தான் கேட்க வேண்டும். வருகிற ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட ஊழல் நடக்கிறதா என்று தெரிந்துகொண்டு, அதற்குப் பின்னால் இந்தக் கேள்வியை பெரியவர் அவர்கள் கேட்டால், அதற்குத் தக்க பதிலை இந்த அரசு சொல்லும்.

ஆகவே தனியார் கல்லூரிகளில்—முந்தைய ஆட்சிக் காலங்களில் அவை ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அப்படிப்பட்ட தனியார் கல்லூரிகளில்—இத்தனை இலட்சங்கள்